## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.1 |
| பெயர்: அழகர்சாமி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(2ம் எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை** :–

நான் ஜம்புளியம்பட்டியில்குடியிருக்கிறேன். பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நாகல் நகரில் உள்ள கே.எஸ்.ஒ.பி. பெட்ரோல்பங்கில் நான் வேலை பார்த்தேன். அப்போது என்னுடன் பிரிட்டோ, அருண் மற்றும் ஒருவரும் வேலை பார்த்தார்கள். சம்பவத்தன்று இரவு சுமார் 08.30 மணியளவில் நாங்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது 2பேர்கள் கத்தியை வைத்துக்கொண்டு எங்கள் பெட்ரோல்பங்க் உரிமையாளர் அகமது புகாரியை கெட்ட வார்த்தையால் பேசிக்கொண்டு வந்தார்கள். கத்தியால் வெட்ட வந்தார்கள். நான் சார், சார் என்று சொல்லிக்கொண்டு போகும்போது உரிமையாளர் ஓடிவிட்டார். அந்த அடையாளம் தெரியாத நபர் கத்தியை வீசும்போது எனக்கு வலது பக்க இடுப்பில் பட்டு காயம் ஏற்பட்டது. நானும் ஓடிவிட்டேன். பின்னர் அவர்கள் ஆபீஸ் ரூமில் இருந்த கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியுள்ளார்கள். அதன்பின்னர் அவர்கள் ஓடியுள்ளார்கள். நான் மருத்துவமனை சிகிச்சைக்கு போய்விட்டேன். நான் மருத்துவ சிகிச்சையிலிருக்கும்போது போலீசார் வந்தார்கள். என்னிடம்

காட்டப்படும் புகாரை கொடுத்தேன். அது அ.சா.ஆ-1 . என்னுடன் பிரிட்டோ என்பவரும் கையெழுத்து போட்டார். அன்று சம்பவத்தில் ஈடுபட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரியா என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**- இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 16:16:49 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.2 |
| பெயர்: அகமதுபுகாரி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>(2ம் எதிரி ஆஜர்.)</u>

<u>முதல் விசாரணை</u> :-

நான் நாகல்நகரில்குடியிருக்கிறேன். அண்ணா மலையார் பள்ளி அருகில் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 08.30 மணியளவில் நான் என்னுடைய அலுவலகத்தில் இருந்தபோது இரண்டுபேர் போதையுடன் வெட்ரா என்று கத்திக்கொண்டு வந்தார்கள். அப்போது என்னுடைய கேசியர் அ.சா.1 இடையில் வந்தபோது அவரை லோசாக வெட்டிவிட்டார்கள். ஆபீஸ் கண்ணாடியை உடைத்துவிட்டார்கள். அதன்பின்னர் சத்தம் போட்டு ஓடிவிட்டார்கள். அன்று சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி சம்பவத்தில் ஈடுபடவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டதாக

சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>– இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 16:17:02 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.3 |
| பெயர்: அருண்பாண்டியன் | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>(2ம் எதிரி ஆஜர்.)</u>

<u>முதல் விசாரணை</u> :–

நான் அண்ணாமலையார் மில்ஸ் காலனியில் குடியிருக்கிறேன். தற்போது மாட்டுப்பண்ணை வைத்துள்ளேன். அ.சா.1, 2 ஐ தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நான் அ.சா.2க்கு சொந்தமான பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தேன். அப்போது ஒருநாள் இரவு சுமார் 8.15 முதல் 8.45 மணிக்குள் இரண்டு பேர்கள் வந்தார்கள். வந்தவர்களில் ஒருவர் அ.சா.1 ஐ கத்தியால்குத்தி விட்டார். இருட்டாக இருந்ததால் அவர் யார் என்று தெரியவில்லை. அதன்பின்னர் அவர்கள் பங்கை நொறுக்கிவிட்டு போய்விட்டார்கள். அதன்பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். இது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி சம்பவத்தில் ஈடுபட்டாரா என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**– இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 16:17:14 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.4 |
| பெயர்: சீனிவாசன் | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>(2ம் எதிரி ஆஜர்.)</u>

<u>முதல் விசாரணை</u> :-

நான் வேலாயுதம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் முன்பு அ.சா.2ன் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தேன். சுமார் 12 வருடங்களுக்கு முனபு ஒருநாள் நான் வேலை பார்த்த காலத்தில் பெட்ரோல் பங்க் கண்ணாடியை உடைத்துவிட்டார்கள். அன்று இரவு சுமார் 10.30 மணிக்கு மேல் உடைந்திருந்ததை பார்த்துவிட்டு கண்ணாடி சில்களை கைப்பற்றினார்கள். அதற்கு நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் ரஞ்சித்குமார் என்பவரும் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்து. அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ-2. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்து. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ-3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் கையெழுத்து செய்த ஆவணங்களில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பெட்ரோல் பங்க் அருகில் தென்புறத்தில் சூர்யாபுட்ஸ், பஞ்சாப் நேசனல் வங்கி எ.டி.எம்., Altimate food wear மற்றும் ஜெராக்ஸ் கடை உள்ளதா என்று எனக்கு ஞாபகமில்லை.

பெட்ரோல் பங்கின்மேற்கு பக்கம் சிவா கிளினிக், ஸ்ரீராம் ஷாப்பி, ஜெயபாரதி லேடீஸ் டெய்லர், தனலட்சுமி பேங்கர்ஸ், மாரிக்கண்ணு லாரி சர்வீஸ் மற்றும் ஆரோ டெய்லர் உள்ளதா என்று எனக்குதெரியவில்லை. வழக்கு தொடர்பாக நான் காவல்நிலையம் செல்லவில்லை.

மறுவிசாரணை - இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 16:17:26 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.5 |
| பெயர்: இளங்கோ | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(2ம் எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை :-

நான் குட்டத்துப்பட்டியில்குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் வேலையை முடிந்து நான் குட்டத்துப்பட்டிக்கு பாண்டியுடன் போய்க் கொண்டிருக்கும் போது அங்குவிலாஸ் இரக்கத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் 1ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என் முன்பு எதுவும் கைப்பற்றவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ-4. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ-5. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் கடந்த 28.01.2014ம் தேதி மாலை 04.15 மணியளவில் நானும் பாண்டியனும் அங்குவிலாஸ் இரக்கத்தில் போய்க்கொண்டிருந்தபோது, காவல் ஆய்வாளர்

இறந்துபோன 1ம் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி எங்கள் முன்னிலையில் கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 18:17:39 +0530

Principal District Judge,
Dindigul.

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| S.C.No. 114 / 2025 | அ.த.சா.6 |
| பெயர்: பாண்டி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 20.07.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(2ம் எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை :-

நான் பாறைப்பட்டியில்குடியிருக்கிறேன். லோடு மேனாக வேலை செய்கிறேன். அ.சா.5 ஐ எனக்கு தெரியும். சுமார் 10, 12 வருடங்களுக்கு முனபு ஒருநாள் நான் வேலையை முடித்துக்கொண்டு அங்கு விலாஸ் இரக்கத்தில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் எங்கிருந்து வருகிறிர்கள் என்று கேட்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உளள்து என்னுடைய கையெழுத்துதான். அவை முறையே அ.சா.ஆ-6, 7 ஆகும். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் கடந்த 28.01.2014ம் தேதி மாலை 04.15 மணியளவில் நானும் பாண்டியனும் அங்குவிலாஸ் இரக்கத்தில் போய்க்கொண்டிருந்தபோது, காவல் ஆய்வாளர் இறந்துபோன 1ம் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதில் நாங்கள் கையெழுத்து

செய்தோம் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி எங்கள் முன்னிலையில் கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.20 16:17:55 +0530

Principal District Judge,
Dindigul.